**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.736/2010 பி.வா.சா.2 நாச்சிமுத்து

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 24.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சொத்துக்கள் கடந்த 26-11-1981 அன்று 1 முதல் 4 வாதிகள் மற்றும் அவர்களது சகோதரரும் என் தந்தையுமான கிருஷ்ணசாமி ஆகியோர் பெயரில் கூட்டாக வா.சா.ஆ.1 கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 கிரைய ஆவணம் மேற்படி ஐவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. அது நடைமுறைக்கு வரவில்லை. வா.சா.ஆ- 1 கிரைய ஆவணத்தில் கிரைய தொகை முழுமையையும் 1ம் வாதியான வடிவேல் தான் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய தேதியிலிருந்து மேற்படி வழக்கு சொத்து மேற்படி ஐவருக்கு கூட்டாக பாத்தியப்பட்டு கூட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

2) வழக்கு சொத்து அருகில் ஆதியில் என் தந்தை வழி தாத்தா நாச்சிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். அச்சொத்தில் என் தாத்தா தண்டாயுதபாணி ரைஸ் மற்றும் ஆயில் மில் நடந்தி வந்தார் என்றால் சரியல்ல. அங்கு என் தந்தை தான் தண்டாயுதபாணி ஆயில் மில் நடத்தி வந்தார். மேற்படி தண்டாயுதபாணி ரைஸ் மற்றும் ஆயில் மில்லுக்கு முதலில் உரிமம் என் தாத்தா நாச்சிமுத்து பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. என் தாத்தா இறப்பிற்கு பின் அந்த உரிமம் அவரது மகன்கள் பெயருக்கு மாற்றப்பட்டு நாச்சிமுத்து அண்ட் சன்ஸ் என்ற பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. தண்டாயுதபாணி ரைஸ் மற்றும் ஆயில் மில் இருந்த சொத்துக்கான பட்டா என் தந்தை மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் நாளது தேதி வரை கூட்டாக உள்ளது என்றால் சரியல்ல.

தண்டாயுதபாணி ரைஸ் மற்றும் ஆயில் மில் இருந்த சொத்து என் தந்தைக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்டு இருந்ததாக கூறுவது வழக்கிற்கான பொய் என்றால் சரியல்ல. கடந்த 03-01-1979 அன்று தண்டாயுதபாணி ரைஸ் மற்றும் ஆயில் மில் இருந்த சொத்தை என் தாத்தா என் தந்தைக்கு உயில் எழுதி வைத்தாக சொல்வதும் வழக்கிற்கான பொய் என்றால் சரியல்ல. என் தாத்தா மேற்படி சொத்து பொறுத்து யாருக்கும் ஒருபோதும் உயில் ஏற்படுத்தவில்லை என்றும் அச்சொத்து பொது சொத்தாக உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்து பொறுத்து பொள்ளாச்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 417/2010 என்ற பாக பிரிவினை வழக்கு இதே வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) இந்த வழக்கு சொத்து என் தந்தையின் சுய சம்பாத்தியத்தில் கிரையம் பெறப்பட்டதாக சொல்வது வழக்கிற்கான பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு சுய சம்பாத்தியத்தில் கிரையம் பெற்றதாக காட்டும் ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 வாதிகள் பெயர் வா.சா.ஆ. 1 கிரைய ஆவணத்தில் பெயரளவில் மட்டுமே அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சேர்க்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி வாதிகள் அவரவர் பங்கிற்கு உரிய தொகையை கொடுத்து தனிக் கிரையங்கள் பெற்றுக் கொள்ளவதாக வாக்குறுதி அளித்தார்கள் என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1 முதல் 4 வாதிகள் மற்றும் என் தந்தை ஆகியோரின் கூட்டு உழைப்பால் பொதுவாக கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என் தந்தை ரூ. 2,50,000/- செலவில் அவர் தனிப்பட்டு மதில் சுவர் கட்டியதாக சொல்வது பொய் என்றும் அச்சுவர் அனைவராலும் பொதுவாக தான் கட்டப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

4) என் தந்தை வழக்கு சொத்து பொறுத்து கடந்த 25-08-2004 அன்று எனக்கு ஆதரவாக உயில் ஏற்படுத்தியதாக சொல்வது பொய் என்றும் அவர் ஒருபோதும் வழக்கு சொத்து குறித்து உயில் ஏதும் ஏற்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அப்படியே அவர் உயில் ஏற்படுத்தி இருந்தாலும் அவருக்கு வழக்கு சொத்து முழுமைக்கும் உயில் ஏற்படுத்த உரிமை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என் தந்தை ஏற்படுத்தியதாக சொல்லும் உயிலை நாளது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உயில் மாண்புமிகு பொள்ளாச்சி முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த அ.வ.எண். 350/2010 வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி உயில் மேற்சொன்னவாறு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக என் எதிர் வழக்குரையிலோ , சாட்சிய வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தந்தை ஏற்படுத்தியதாக நான் சொல்லும் உயில் என்னால் போலியாக தயார் செய்யப்பட்டது என்பதால் தான் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) 1 முதல் 3 வாதிகள் தங்கள் திருமணத்திற்கு பின்னிட்டு இந்து கூட்டு குடும்பத்தை விட்டு வெளியேறி விட்டார்கள் என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 4 ம் வாதி ஊதாரி தனமாக இருந்து ஏற்படுத்திய கடனை என் தந்தை அடைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமியின் மனைவி தான் 1ம் பிரதிவாதி நாச்சம்மாள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தேவையற்ற தரப்பினர் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. என் தந்தையின் வாரிசு சான்று கோரி நானும் என் தாயாரும் , சகோதரிகளும் மாண்புமிகு பொள்ளாச்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண். 470/2006 வழக்கில் இவ்வழக்கு 1 ம் பிரதிவாதி தான் அவ்வழக்கிலும் 1 ம் பிரதிவாதியாக

உள்ளார் என்றால் சரிதான். அவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என் தந்தை கிருஷ்ணசாமியின் முதல் மனைவியாக இருந்து குலவழக்கப்படி விவாகரத்து பெற்றவர் என்றும் அதன் பின் தான் என் தந்தை என் தாயாரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றும் தான் கட்சி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி வேறு ஒரு கிருஷ்ணசாமியின் மனைவி என்று தான் கட்சி செய்துள்ளோம். 1 ம் பிரதிவாதி வேறு ஒரு கிருஷ்ணசாமியின் மனைவி என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்தை என் தந்தையும் அவருக்கு பின்னிட்டு நானும் தனித்து அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 4 ம் வாதியின் தூண்டுதலில் மற்ற வாதிகள் அவருடன் சேர்ந்து தாக்கல் செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தற்போதும் காலியிடமாக உள்ளது என்றால் சரியல்ல . அது விவசாய பொருட்களை காய வைக்கும் களமாக பயன்பட்டு வருகிறது. அதில் கட்டிடங்கள் இல்லை.

7) வழக்கு சொத்தில் 1981-1986 காலகட்டத்தில் என் தந்தை சுமார் 20 லட்சம் செலவு செய்து மார்டன் ரைஸ் மில் உருவாக்கினார் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஒருபோதும் மில் செயல்படவில்லை என்றால் சரியல்ல. கடந்த 2004 வரை உமி பிரிக்கும் இயந்திரம் அங்கு பயன்பாட்டில் இருந்தது. வழக்கு சொத்தை வாங்கவும் , மேம்படுத்தவும் 1 முதல் 4 வாதிகளிடம் எத்தொகையும் கொடுக்கவில்லை என சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என் தந்தைக்கு முன் அனுபவ பாத்தியம் படி பாத்தியம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பிறந்த தேதி முதல் வழக்கு சொத்தை என் தந்தையுடன் சேர்ந்து அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதன்

அடிப்படையில் வழக்கு சொத்தில் எனக்கும் முன் அனுபவ பாத்தியம் படி பாத்தியம் ஏற்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

8) இவ்வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றும் இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றும் நான் கட்சி செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து எனக்கு எதிரிடை அனுபவப்படி பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரி தாக்கல் செய்ய இருப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நாளது தேதி வரை அவ்வாறான வழக்கு ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு தனிப்பட்ட பாத்தியம் இல்லாததால் தான் நான் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தும் அதன் அருகில் உள்ள சொத்தும் க.ச.எண். 247 காலையில் கட்டுப்பட்டது என்றால் சரிதான் . அவை வேறு வேறு உட்பிரிவில் உள்ளன. வழக்கு சொத்தையும் அதன் அருகில் உள்ள சொத்தையும் வில்லங்க சான்று தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரியல்ல.

9) வழக்கு சொத்திலும் அருகில் தண்டாயுதபாணி ரைஸ்மில் இருந்த சொத்திலும் தனக்கு உள்ள 1/5 பங்கினை 4 ம் வாதி என் தாயாரிடம் கடந்த 09-02-1993 அன்று பதிவு செய்த அடமானம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அவ்வாறான அடமானம் ஏதும் இல்லை. மேற்படி அடமானத்தின் படி 4 ம் வாதி பணம் செலுத்தாததால் என் தாயார் மாரியம்மாள் 4 ம் வாதி மீது மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 15/2010 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அவ்வழக்கு என் தாயார் தொடர்ந்து நடத்தாததால் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி அடமானம் பற்றியும் அ.வ.எண். 15/2010 வழக்கு பற்றியும் வாதிகள் தங்கள் வழக்குரையில் குறிப்பிட்டும் அதனை நான் என் எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் சரிதான்.

10)என்னை இவ்வழக்கில் என் தாயாரான 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்த போது *"வழக்கு சொத்தில் 2 முதல் 7 பிரதிவாதிகளுக்குதான் பாத்தியம் உள்ளது என்றும் வாதிகள் மற்றும் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியம் ஏதும் இல்லை என்றும் சொன்னால் சரிதான்.* "என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை எனக்கு ஆதரவாக உயில் ஏற்படுத்தியதாக சொல்வது பொய் என்பதால் தான் மேற்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு மட்டும் எதிரிடை அனுபவபடி பாத்தியம் ஏற்பட்டதாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டதாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல.

11) வழக்கு சொத்து 1 முதல் 4 வாதிகளுக்கும் என் தந்தைக்கும் பொதுவாக பாத்தியப்பட்டது என்றும் அதில் மேற்படி ஐவருக்கும் தலா 1/5 பங்கு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி